செ.வெ.எண்: 45 நாள்:27.06.2020

## பத்திரிக்கைச் செய்தி

கரூர் மாவட்டத்தில் 1429 –ஆம் பசலி ஆண்டிற்கான வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) 24.06.2020, 25.06.2020, 26.06.2020 மற்றும் 27.06.2020 ஆகிய நாட்களில் காலை 10.00 மணி முதல் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும் நடைபெறுகிறது இந்த வருவாய் தீர்வாயத்தில் வருவாய்த்துறை சம்பந்தப்பட்ட கணக்குகளுக்கு தீர்வு காணப்படும். கோவிட் 19 நோய்த்தொற்றினை கட்டுப்படுத்தும் வகையில் தமிழகத்தில் 30.06.2020 வரை குற்றவியல் நடைமுறை சட்டம் 144ன் கீழ் தடை உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் அரசாணை நிலை எண் 306 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை நாள்.17.06.2020ன் படி கரூர் மாவட்டத்தில் 1429ம் பசலி (2019–2020)க்கான வருவாய் தீர்வாய மனுக்கள் பொதுமக்களிடமிருந்து நேரடியாக பெறப்படமாட்டாது. எனவே பொதுமக்கள் வருவாய் தீர்வாய (ஜமாபந்தி) தொடர்பான கோரிக்கை மனுக்களை https://gdp.tn.gov.in/jamabandhi என்ற இணையத்தளம் மூலம் சுயமாகவோ அல்லது இ–சேவை மையங்கள் மூலமாகவோ 29.06.2020 முதல் 15.07.2020 வரை பதிவேற்றம் செய்து கொள்ளலாம் எனவும், பதிவேற்றம் செய்யப்படும் மனுக்கள் மீது உரிய முறையில் பரிசீலனை செய்யப்பட்டு மனுதாரர்களுக்கு தகவல் வழங்கப்படும் எனவும், கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.த.அன்பழகன் அவர்கள் தெரிவித்துக் கொள்கிறார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.